# ‘EDEX கனவை நனவாக்கிடுங்கள்’ விபரங்களும் வழிகாட்டல்களும்

***‘EDEX*** கனவை நனவாக்கிடுங்கள் - நோக்கங்கள்

- ***EDEX* கனவை நனவாக்கிடுங்கள்** திட்டம் என்பது இளைஞர்களின் கனவுகளை நனவாக்கிட அவர்களுக்கு உதவி புரிந்து சமூகத்தில் நேர்த்தியான மாற்றத்தை உருவாக்கிடும் வகையில் கல்வி, திறன்கள் அபிவிருத்தி, புதிய கண்டுபிடிப்புகள் மூலம் சிறந்த தொழில்வாய்ப்பை பெற்றுக் கொடுத்து நீண்ட கால நிலையான வாழ்க்கைக்கு வழியமைக்கும் திட்டமாகும்.

- ***EDEX* கனவை நனவாக்கிடுங்கள்** திட்டத்தின் மூலம் மாணவ சமுதாயத்துக்கு அதிகளவு நன்மை பயக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் அவர்களில் காணப்படும் திறமையின் மூலம் பொதுவான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் ஆற்றலும், ஏனைய இலங்கையர்களிடையே குடிமை உணர்வை மதித்து பாராட்டும் மனப்பாங்கை உருவாக்கவும் முடியும்.

-

***EDEX* கனவை நனவாக்கிடுங்கள்** திட்டத்தினுள் அடங்கும் பகுதிகள்

***EDEX* கனவை நனவாக்கிடுங்கள்** திட்டமானது பின்வரும் தலைப்புகளினுள் உள்ளடங்கும் திட்டங்களுக்கு உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

- தரமான கல்வி கிடைக்கும் வகையில் பாடசாலை சூழலுக்கு தேவையானவற்றை பூரணப்படுத்தல்.
- புதிய ஆக்கங்கள் மற்றும் சிந்தனைகளை ஊக்குவித்தல்.
- மென் / தொழில்நுட்ப திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி
- மீள்சுழற்சி அல்லது “நிலையான வாழ்க்கை” முறைக்கு அவசியமான வளங்கள் சேதமடையாத வகையில் கையாளப்படும் ஏதேனும் நடைமுறைகள்.

யார் விண்ணப்பிக்க முடியும்

பின்வருவன அனுகூலங்களுக்குள் உள்ளடங்கும்

- இலங்கையின் இளைஞர் / மாணவர் குழுக்கள்
- பொது நோக்குடைய பாடசாலை கழகங்கள் மற்றும் இளைஞர் மன்றங்கள்

திட்டங்களின் அளவுகள்

EDEX திட்டத்துக்கு அமைவாக ஆரம்பத்தில் வழங்கப்படும் ஆகக்கூடிய நிதியுதவி பெறுமதி ரூ.100,000 ஆக அமைந்திருக்கும். ஆயினும், வெளிவாரியாக நிதியுதவி கிடைக்கும் பட்சத்தில் EDEX கனவை நனவாக்கிடுங்கள் கண்காணிப்பு குழு மூலம் நிதி வழங்கல் தொடர்பான இறுதி தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் உண்டு.

தெரிவு செய்யப்படும் முறை

கனவை நனவாக்கிடுங்கள் திட்டத்தின் கண்காணிப்பு குழு உரிய அளவுகோல்களுக்கு அமைவாக தமக்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களை பரிசீலனை செய்யும். பங்குதாரர்களினால் சமுதாயத்துக்கு அதியுயர் அனுகூலங்கள் கிடைக்கும் வகையில் அமையும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் நாட்டின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் திட்டங்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகளையும் தெரிவுக்குழு முன்னெடுக்கும்.

விதிமுறைகளும் நிபந்தனைகளும்

- அனுகூலத்துக்காக ஆகக்குறைந்தது 40 பேர் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

- விண்ணப்பதாரரின் முதலீடுகள் உள்ளடங்கலாக திட்டத்தின் மொத்த செலவீனம் ரூ. 250,000 இனை விட அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும்.

- காணி / இடவசதி, சமூக சேவகர், தொழில்நுட்ப உதவியாளர்... போன்ற முடியுமான சகல துறைகளிலும் விண்ணப்பதாரர் தமது வளங்களை பயன்படுத்த வேண்டும்.

- அனைத்துவிதமான தொழில்நுட்ப உதவிகள் / ஆலோசனைகள் இலவசமாக பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். (தேவையேற்படின் நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டுவரல் வேண்டும்)

- திட்டத்தின் மொத்த கால எல்லை 6 மாதங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

- அனுமதியளிக்கப்பட்ட நிதித் தொகை திட்டம் முன்னெடுக்கப்படும் போது பகுதி பகுதியாக வழங்கப்படும். இதற்காக முறையாக செயற்பாட்டு அறிக்கைகள் பரீட்சிக்கப்படும். (தேவையேற்படும் பொழுது)

- உள்நாட்டு நன்கொடையாளர் அல்லது வளங்களை வழங்குபவர் சம்பந்தப்படுவாராயின், அவர்களுக்கு திட்டத்துடன் நேரடியாக இணைந்து கொண்டு திட்ட முன்னெடுப்பாளர்களுக்கு நிதியுதவிகளையும் திட்டத்தை செயற்படுத்துவதற்கும் உதவக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- வெளி அல்லது உள்ளக நிதி நன்கொடை அமைப்புகள் சம்பந்தப்படுமாயின், அவை தற்போது நடைமுறையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான கட்டுக்கோப்புகளுக்கு உள்ளடங்க வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகார சபைகளிலிருந்து அனுமதியை பெற்றிருத்தல் வேண்டும்.